# இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு

# I Will Take the Cup of Salvation

Album 28 Song 5 | ஆல்பம் 28 பாடல் 5



## Song 5 இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு

Psalm 116 – A beautiful personal thanksgiving psalm. The psalmist was near death, cried out to God, and was delivered. He now chooses to publicly praise and offer the "Cup of Salvation."

இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு
கர்த்தருடைய நாமத்தை தொழுதுக்கொள்வேன்
நான் கர்த்தருக்கு செய்த பொருத்தனைகளை
அவருடைய ஜனங்களுக்கு முன்பாய் செலுத்துவேன்

கர்த்தருக்கு முன்பாய் பரிசுத்தம் செய்து
ஜீவனுள்ளோர் தேசத்தில் நடந்திடுவேன்
நான் உமக்கு ஸ்தோத்திரபலி செலுத்தி
உமது நாமத்தைத் தொழுதுகொள்வேன்

கர்த்தரே நான் உமது அடியேன்
உம்முடைய அடியாளின் புத்திரன்
கர்த்தரே நான் உமது ஊழியக்காரன்
என் கட்டுகளை நீர் அவிழ்த்துவிட்டீர்

என் ஆத்துமாவை மரணத்திற்கும்
எண் கண்களைக் கண்ணீருக்கும்
என் கால்களை இடறுதலுக்கும்
தேவா நீரே தப்புவித்தீர்

கர்த்தர் கபடற்றவர்களைக் காக்கிறார்

என்னை அவர்தான் இரட்சித்தார்
கர்த்தர் கிருபையும் நீதியுள்ளவர்
என்னுடைய தேவன் மன உருக்கமானவர்

எந்த மனுஷனும் பொய்யன் என்பேன்
கர்த்தரிடத்தில் மட்டும் நான் அன்பு கூருவேன்
நான் உயிரோடு இருக்கும் வரை உம்மைத்
தொழுதுக்கொள்வேன்
என் விண்ணப்பத்தை கேட்டு என்னை விடுவியும்

கர்த்தர் எனக்கு செய்த எல்லா உதவிக்கும்
நான் அவருக்கு என்னத்தை செலுத்துவேன்
கர்த்தர் எனக்கு கொடுத்த எல்லா கிருபைக்கும்
நான் அவருக்கு எப்படி நன்றி சொல்வேன்?

நன்றி
நன்றி
நன்றி
நன்றி

இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு
கர்த்தருடைய நாமத்தை தொழுதுக்கொள்வேன்
நான் கர்த்தருக்கு செய்த பொருத்தனைகளை
அவருடைய ஜனங்களுக்கு முன்பாய் செலுத்துவேன்

HALLELUJAH
HALLELUJAH
HALLELUJAH
HALLELUJAH

